**தலைப்பு 314 – தென் மாகாண சபை – 2022**

**1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் பணிப்பொறுப்புக்கள்**

**1.1 தூரநோக்கு**

மனித நேயமிக்க நிர்வாக முறையின் ஊடாக சுபீட்சமான தென் மாகாணம்

**1.2 பணிக்கூற்று**

தென் மாகாணத்தில் காணப்படும் மனித, நிதி மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் செயற்படுத்துவதன் ஊடாக மாகாணத்தினுள் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை உயர் நிலைக்கு கொண்டு வருதலும் தேசிய பொருளாதாரத்திற்கு உயர்ந்த பங்களிப்பினை வழங்குதலும்.

**1.3 பணிப்பொறுப்புக்கள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்னவற்றின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்

**2. கணக்குகள்**

**2.1 நிதிக்கூற்றுக்கள்**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

தென் மாகாண சபைக்காக வழங்கப்பட்ட மொத்த நிதிஏற்பாடு ரூபா 40,582 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த ரூபா 39,310 மில்லியன் நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

<u>2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியேற்பாட்டின் பயன்பாடு தொடர்பான தகவல்கள்</u>

| செலவின விடயம் | தேறிய நிதிஏற்பாடு | செலவினம் | கட்டுநிதி கிடைக்காத அளவு | கட்டுநிதி கிடைக்காத அளவு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| மீண்டெழும் | 38,566 | 38,014 | 552 | 1.43 |
| மூலதன | 2,016 | 1,296 | 720 | 36 |
| **மொத்தம்** | 40,582 | 39,310 | 1,272 | |

**3. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபையின் நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபையின் நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.